அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 04/2016

எனது இல : EST/6/06/HUS/1010
அரசாங்க நிர்வாக மற்றும்
முகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2016.08.26

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**<u>தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 5 ஆம் பிரிவினை திருத்தியமைத்தல்</u>**

**<u>அரசாங்க இல்லங்களுக்கான வாடகை</u>**

தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 5:4 மற்றும் 5:4:1 உப பிரிவின் பிரகாரம் தங்களது அவதானம் கோரப்படுகின்றது.

02. அவ் உப பிரிவினை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தியமைப்பதற்கு 2016.02.03 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

5:4 அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள தம்பதிகள் அரசாங்க இல்லமொன்றில் வசிக்கும் போது, அவ் இல்லத்தை பெற்றுக் கொள்வதற்கு உரித்துடைய அலுவலர், அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள இல்லத்தைப் பெறுவதற்கு உரித்துப் பெறாதிருப்பின், அவ் அலுவலரின் சம்பளத்தில் இருந்து நூற்றுக்கு பன்னிரண்டு (12 ½) வீதம் அறவிடப்பட வேண்டும்.

5:4:1 அரசாங்க இல்லமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்துடைய அலுவலர், அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள இல்லத்தைப் பெறுவதற்கும் உரித்துப்பெறும் பட்சத்தில், அவ் அலுவலரின் சம்பளத்தில் இருந்து நூற்றுக்கு பத்து வீதம் (10) அறவிடப்பட வேண்டும்.

03. மேற்படி ஏற்பாடுகள் 2016.02.03 ஆந் திகதியில் இருந்து அமுல்படுத்தப்படும்.

04. இச் சுற்றறிக்கை பொதுத் திறைசேரியின் இணக்கப்பாட்டுடன் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்/ ஜே.ஜே. ரத்னசிறி
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு